# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

அசல் வழக்கு எண்.85/2022
C/W OS.15/2023

வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 26–11–2025.

பெயர் = அழகர்சாமி வா.சா.1

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1, 5 முதல் 8 ம் பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.–

(1) 2 ம் பிரதிவாதி நாகூர்மீரா பூர்வீகம் பூலாங்கால் இருப்பது கள்ளக்குறிச்சி என்றால் சரிதான். தாவா சொத்து புஞ்சை நிலம் என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கு வடக்கே உள்ள தீன்முகமது நாகூர்மீராவுக்கு என்ன உறவுமுறை என்றால் சித்தப்பா, பெரியப்பா மக்கள். தாவாச்சொத்திற்கு கிழக்குபக்கம் உள்ள கமீதுநிஷா 2 ம் பிரதிவாதிக்கு என்ன உறவுமுறை என்று எனக்குத் தெரியாது. மேற்கே உள்ள சந்திரகேசவன் என்னுடைய சித்தப்பா மகன். சந்திரகேசவனுக்கு அந்த சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் பூர்வீக பாத்தியம் என சாட்சி கூறுகிறார். அவருக்கு பூர்வீக பாத்தியம் என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் அவர் வைத்துள்ளார் என சாட்சி கூறுகிறார். எனக்கு தாவாச்சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் பூர்வீகபாத்தியம். வா.சா.ஆ.13 அடங்கல் கணக்கைத்தவிர தாவாச்சொத்து எனக்கு பாத்தியம் என்பதற்கு வேறு ஆவணங்கள் உள்ளதா என்றால் வீட்டில் பார்த்துவிட்டுதான் சொல்லமுடியும் என சாட்சி கூறுகிறார்.

(2) என் தகப்பனார் பெயரில் வா.சா.ஆ.13 ற்கு தீர்வை செலுத்தியுள்ளேனா என்றால ஆமாம். தீர்வை செலுத்தியதற்கான ரசீதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தீர்வை செலுத்தியதாக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச்சொத்திற்கான 1952 ம் வருடத்திய செட்டில்மெண்ட் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் வீட்டில் இருக்கிறதா என பார்த்துக்கொள்கிறேன் என சாட்சி கூறுகிறார். கேசவன் பெயரில் உள்ள உத்தரவு வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது என சாட்சி கூறுகிறார். வழிவிட்டான் நாயக்கருக்கு நானும், கேசவன், காசி ஆகிய மூவரும் பிள்ளைகள் என்றால் சரிதான். என் அப்பா பெயரில் உள்ள

பட்டாவானது 20.12.2022 ல் கேசவன் பெயருக்கு மாறியுள்ளது என்றால் சரிதான் எங்களுடைய இடங்களை நாங்கள் மூவரும் பிரித்துக்கொண்டோம் அதனால் மாறியுள்ளது என சாட்சி கூறுகிறார்.

(3) கேசவன் பெயருக்கு பட்டா மாறுதலுக்கு எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என நானும், காசியும் வாக்குமூலம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். பட்டா மாறிய ஒரு மாதத்திலேயே தாவாச்சொத்தை கேசவன் பிரேமா என்பவருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.5 ல் என்னுடைய மாமனார் 1ம் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார். தாவாச்சொத்திற்கு வேறு பத்திரம் இல்லை என்பதால் பிரேமாவிற்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்து பத்திரம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரிதான்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S